# திருக்கோவில் பிரதேச புனைகதை இலக்கியம் - ஓர் ஆய்வு

**த. கிருஷ்ணவேணி**
மொழித்துறை
கிழக்குப் பல்கலைக் கழகம், இலங்கை
வந்தாறுமூலை
*kiru.krt@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்:** தமிழ் இலக்கிய வரலாற்றில் புனைகதை இலக்கியம் பரந்துபட்ட விரிவுடையதும் சமூகத்தின் அனைத்து விடயங்களையும் தெளிவாகப் பிரதிபலிக்கும் இலக்கிய வடிவமும் ஆகும். ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இத்தகு புனைகதை இலக்கியப் படைப்புக்களின் பெரு வளர்ச்சி குறிப்பிடத்தக்கது. எனினும் ஈழத்தைப் பொறுத்தவரையில் பல புனைகதை இலக்கியங்கள் இற்றை வரையும் நூலுருப்பெறா வண்ணம் காணப்படுவதோடு சில முக்கிய புனைகதை இலக்கியங்கள் பெயரளவில் மட்டும் அறியப்படும் ஒன்றாகவே காணப்படுகின்றன. பிரதேச அடிப்படையில் நோக்கும் பொழுது ஏராளமான புனைகதை இலக்கியங்கள் தோன்றியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இதனடிப்படையில் ஈழத்துப் புனைகதை இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிட்தக்களவு மாற்றத்தை ஏற்படுத்திய திருக்கோவில் பிரதேச புனைகதை இலக்கியங்களின் அறிமுகம், உருவ, உள்ளடக்க விடயங்கள், முக்கியத்துவம் போன்ற விடயங்கள் இவ்வாய்வினூடே விளக்கியுரைக்கப்படுவதோடு புனைகதை இலக்கியப் படைப்பாளர்கள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. இப் பிரதேசத்தைச் சேர்ந்தோர் இடம், புலம் பெயர்ந்து உள்ளமையினால் அவர்களின் படைப்புக்களும் இவ்வாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இப் பிரதேச புனைகதை இலக்கியங்கள் தொடர்பான விளக்கத்தினை இவ்வாய்வு உள்ளடக்கியுள்ளது.

**திறவுச் சொற்கள்:** புனைகதை இலக்கியம், திருக்கோவில், படைப்பாளர்கள்

## 1. அறிமுகம் :

இப் பிரதேசப் படைப்பாளிகள் இப் பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களாகவும், இங்கிருந்து இடம், புலம் பெயர்ந்தவர்களாகவும், திருமணம் போன்ற காரணிகளால் வேறு இடங்களிலிருந்து வந்து இப்பிரதேசத்தை வதிவிடமாகக் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். இவ் அனைத்து வகையினரினதும் படைப்புக்கள் இவ் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன.

"திருக்கோவில் பிரதேச புனைகதை இலக்கிய வகையுள் குறிப்பாக நாவல் இலக்கியம் 1930, 1931களிலேயே இப் பிரதேசத்தில் தோற்றம் பெற்றுள்ளது" (நவநாயகமூர்த்தி,2004:168). "இப் பிரதேசத்தில் நவீன இலக்கியம் செழிப்புற்றிருந்த காலமாக 1975 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தைக்காண முடிகின்றது" (நவநாயக மூர்த்தி,2014:160) என நவநாயக மூர்த்தி கூறியுள்ள போதிலும் அதற்குப் பிற்பட்ட காலம் முதல் அதாவது 1975 ஆம் ஆண்டு முதல் இற்றை வரையும் புனைகதை இலக்கியமானது வளர்ச்சியடைந்த வண்ணமே காணப்படுகின்றது எனலாம்.

## 2. ஆய்வின் நோக்கம் :

இன்றைய நவீன யுகத்திலும் பல புனைகதைப் படைப்பாளிகளின் ஆக்கங்கள் அச்சில் வெளிவராமலும் தொகுக்கப்படாமலும் அறியப்படாத நிலையிலும் காணப்படுகின்றன. எனவே இப் பிரதேச புனைகதை இலக்கியங்களையும் அவற்றின் முக்கியத்துவத்தினையும் இலக்கிய கர்த்தாக்கள் பற்றியும் ஆராய்வது இவ்வாய்வின் நோக்கங்களாகும்.

## 3. தகவல் சேகரிப்பு :

இப் பிரதேச புகைகதை இலக்கியப் படைப்பாளர்களுடனான உரையாடல், அவர்களது இலக்கியங்கள், அவ் இலக்கியங்கள் தொடர்பான இலக்கியங்கள் முதலியன இவ்வாய்வின் அடிப்படை மூலங்களாக உள்ளன.

### 4. ஆய்வு முறை :

திருக்கோவில் பிரதேச புனைகதை இலக்கியம் பற்றிய இவ்வாய்வினை விளக்கியுரைப்பதற்கு "விளக்கவியல் அணுகுமுறை" கையாளப்படுகின்றது. புனைகதைகளின் உருவம், உத்தி, உள்ளடக்கம் ஆகியன இவ்வணுகு முறை மூலம் விளக்கப்பட்டுள்ளன.

### 5. நாவல் இலக்கியப் படைப்பாளர்களும் படைப்புக்களும் :

#### 5.1 திரு. த. உவில்லியம்பிள்ளை :

ஆங்கிலப் பெருமகனான கிறீன்துரை என்பவரிடம் செயலாளராகவும் அவரது நண்பராகவும் இருந்த உவில்லியம் பிள்ளையவர்கள் ஆங்கில மொழியில் நல்ல நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார். 1958, 59களில் கையெழுத்துப் பிரதிகளாக உவில்லியம் பிள்ளை அவர்களிடம் இரண்டு நாவல்கள் இருந்துள்ளமை பற்றி பண்டிதர் வீ. சி. கந்தையா அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"இவர் எழுதிய 'இந்திராபுரி ரகசியம்', 'மஞ்சட்பூதம்' அல்லது 'இழந்த செல்வம்' என்னும் இவ்விரண்டுமே மட்டக்களப்பு ஆசிரியர்களால் எழுதப் பெற்ற முதல் தமிழ் நாவல்கள் எனலாம்" (வீ.சி.கந்யைா,1964:321).

அக்காலத்தில் இவ்விரண்டு நாவல் இலக்கியங்களும் அச்சில் வெளிவந்திருப்பின் இப்பிரதேச நாவல் இலக்கியத்தின் முன்னோடியாக மட்டுமன்றி மட்டக்களப்புப் பிரதேச முதல் தமிழ் நாவல் இலக்கிய முன்னோடியாகவும் திரு. த. உவில்லியம்பிள்ளையவர்கள் விளங்கியிருப்பார். வில்லியம் பிள்ளை அவர்களின் பணி தம்பிலுவிலுக்கு மட்டுமன்றி கிழக்கு மாகாணத்திற்கே பெருமை சேர்ப்பதாக பேராசிரியர். செ. யோகராசா அவர்கள் குறிப்பிட்டுள்ளமை திருக்கோவில் பிரதேசத்தின் பெருமையையும் வெளிக்காட்டுவதாயுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டு காலப்பகுதியில் பல நூல்களை எழுதி தம்பிலுவில் மண்ணுக்குப் புகழ் சேர்த்த புலவர் த. உவில்லியம்பிள்ளை ஆவார்.

#### 5.2 கோவிலூர் செல்வராஜன் :

புனைகதை எழுத்தாளர் மட்டுமன்றி சிறந்த சிந்தனையாளரும் கலை இலக்கிய ஆர்வலருமான கோவிலூர் செல்வராஜன் எழுதிய ''இளமைக் கோவில் ஒன்று'' என்ற நாவல் கலாவல்லி சஞ்சிகையிலும்(1975), 'படகுத்துறை அருகினிலே' என்ற நாவல் தினகரன் பத்திரிகையிலும்(1980), ''லாவண்யா ஒரு முற்றுப் புள்ளி'' என்ற நாவல் தினகரனிலும்(1981) தொடர்கதைகளாக வெளிவந்துள்ளன. இவை இன்று வரையும் நூலுருப்பெறாத நிலையிலேயே காணப்படுகின்றன. இம் மூன்று நாவல்களும் கிடைக்கப் பெறவில்லை.

#### 5.3 யோகா. யோகேந்திரன் :

ஈழத்தில் சிறந்த புனைகதை இலக்கிய கர்த்தாவாக இன்றும் மிளிர்ந்து வரும் திருமதி. யோகா. யோகேந்திரன் செங்கதிர் சஞ்சிகையில் "மீண்டும் ஒரு காதல் கதை'' எனும்

நாவலை தொடராக வெளியிட்டு உள்ளார். இவ்வாறு தொடராக வெளிவந்து 2014இல் நூலுருப்பெற்றுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும்.

## 6.சிறுகதை இலக்கியப் படைப்பாளர்களும் படைப்புக்களும் :

### 6.1 கனகரத்தினம். செபரத்தினம் :

புகழ் பெற்ற சிறுகதை எழுத்தாளரான எஸ். பொன்னத்துரை (எஸ்.பொ.)யின் முனைப்பினால் சிறுகதை புனைவதில் ஈர்ப்பினைப் பெற்றுக் கொண்டதன் விளைவாக 1962ஆம் ஆண்டு தொடங்கி காலத்துக்குக் காலம் சிறுகதை எழுதி வந்துள்ளார். இவரின் சிறுகதைகள் பல போட்டிகளில் பல பாராட்டுக்களையும் பிரிசில்களையும் பெற்றுள்ளன. 1962ஆம் ஆண்டிலிருந்து இவரால் எழுதப்பெற்ற சிறுகதைகள் பதினாறைத் தெரிந்தெடுத்து ''நயனங்கள் பேசுகின்றன'' எனும் தலைப்பிலான சிறுகதைத் தொகுப்பினை மணி மேகலைப் பிரசுரம் 2000ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளது.

### 6.2 திருக்கோவில் கவியுவன் :

1980இற்குப் பிந்திய ஈழத்துச் சிறுகதைப் போக்குகளின் முக்கிய பிரதிநிதிகளாக விளங்கியவர்களில் ஒருவர் திருக்கோவில் கவியுவன். 1990களின் நடுப்பகுதிகளளவில் சரிநிகர், வீரகேசரி முதலியவற்றில் சிறுகதைகளை எழுதத் தொடங்கிய இவரது கதைகளின் தொகுதியாக ''வாழ்தல் என்பது…'' 1996இல் நண்பர்கள் வெளியீடாக வந்துள்ளது. தேசிய ரீதியில் தமிழ் அறிஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள் என்போரது பாராட்டுதலைப் பெற்றுக்கொண்ட இந்நூலானது ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றுள்ளது. கவியுவனின் சிறுகதைகள் பிள்ளைக்கால அனுபவச் சித்திரிப்புக்கள், பட்டதாரி மாணவ வாழ்க்கைச் சித்திரிப்புக்கள் மிகுந்த இலக்கிய நேர்மையுடனும் உணர்ச்சி அந்நியோந்நியத்துடனும் படைக்கப்பட்டுள்ளன. இவரது கதைகள் 1990களின் ஈழத்துச் சிறுகதைப் போக்கையும் ஈழத்துத் தமிழ்ச் சமூக நிலையையும் பிரதிபலிக்கின்றன.

### 6.3 யோகா. யோகேந்திரன் :

இவரது பல சிறுகதைகள் பல பத்திரிகைகளில் வெளியாகியுள்ளதோடு பல மட்டங்களிலும் பல பரிசுகளையும் பெற்றுள்ளன. இவரின் சிறுகதைகள் மூன்று தொகுதிகளாக நூலுருப்பெற்றள்ளன. அவை ''இன்னார்க்கு இன்னாரென்று''(2002), ''அவள் காத்திருக்கிறாள்''(2004), ''அவர்கள் அப்படித்தான்''(2015) என்னும் தலைப்புக்களில் நூலாக உருப்பெற்றுள்ளன. ஈழவரின் சிறுகதைத் தொகுப்பு, இலங்கை எழத்தாளர் சிறுகதைத் தொகுப்பு ஆகியவற்றிலும் இவரது சிறுகதைகள் சேர்க்கப்பட்டு அலங்கரிப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவரது கதைகள் ஆழமான கருத்து நிலை கொண்டவை. இவரது ஆக்கங்களை ஆழிப் பேரலை அள்ளிச் சென்றமை மன வருத்தத்திற்குரியதாகும்.

### 6.4 கோவிலூர் செல்வராஜன் :

மேற்கு ஐரோப்பிய நாடுகளிலே வதிவிடம் பெற்று வாழும் ஈழத் தமிழர்கள் மத்தியிலே புனைகதைத் துறையிலே ஆர்வம் காட்டி வருகின்றவர்களின் எண்ணிக்கை பெருகி வருகின்றமை உவகைக்குரியதாகும். இவரது ஒன்பது சிறுகதைகளை உள்ளட்க்கியதாக ''விடியாத இரவுகள்'' என்னும் தலைப்பில் சிறுகதைத் தொகுதி நூலொன்று 1997இல் வெளியாகியுள்ளது. இச்

சிறுகதைத் தொகுதிக்கு முன்னுரை எழுதிய இந்திரா பார்த்தசாரதி அவர்கள் அதன் உள்ளடக்கம் பற்றியும் ஆசிரியர் பற்றியும் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''வாழ்க்கை பற்றிய மதிப்பீட்டமைப்பு (value system) பரிபூரணமாக எல்லாக் கலாசாரத்துக்கும் ஒத்த நிலையிலும் கால ஓட்டத்துக்கு ஈடுகொடுக்கும் அளவிலும் இருக்க இயலாது. இந்தக் கருத்துடன் மாறுபடும் போதுதான் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இச் சிக்கல்களைச் சித்திரித்து எழுதப்பட்டுள்ள கதைகள் தாம் இச் சிறுகதைத் தொகுதி. ஆசிரியர் நோர்வேயிலிருக்கிறார். புலம்பெயர்ந்த தமிழர் விரும்பிச் சென்றவரல்லர். அரசியலும் வரலாறும் சேர்ந்திழைத்த கொடுமையினால் வெளியேறியவர்''(கோவிலூர் செல்வராஜன்,1997:9). இவர் 2016இல் ''ஊருக்குத் திரும்பணும்'' எனும் சிறுகதைத் தொகுதியையும் வெளியிட்டுள்ளார்.

### 6.5 முல்லை வீரக்குட்டி :

இன்று வரையும் தொடர்ச்சியாக பத்திரிகைகளில் பிரசுரித்து வருவதோடு கையெழுத்துப் பிரதிகளாகவும் சிறுகதைகள் பல வைத்துள்ளார். இவரது சிறுகதைகளை ஒரு தொகுதியாகத் தொகுத்து விரைவில் வெளியிடவுள்ளதாகக் கூறியுள்ளார். இவரின் சிறுகதைகள் குடும்ப உறவுகளோடு சம்பந்தப்பட்டனவாகவும் போர்க்காலச் சூழலின் அவலங்களைச் சித்திரிப்பனவாகவும் காணப்படுகின்றன.

### 6.6 தம்பிலுவில் தயா :

இவர் சிறுகதைத் துறையில் அதிக ஆர்வம் காட்டவில்லையாயினும் இவரின் சிறியளவான சிறுகதைகளும் பெறுமதி வாய்ந்தவை ஆகும். இவை பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டும் உள்ளன. இவரின் சிறுகதைகளும் நூலுருப் பெறவில்லை. எண்ணிக்கையிலும் அளவிலும் சிறியதான சிறுகதைகளையே இவர் அவ்வப்போது படைத்து வருகின்றார். இவரின் சிறுகதைகள் அவரின் வாழ்வனுபவங்களோடு தொடர்புபட்டனவாகவும் சமூகத்தில் இடம்பெறும் பிரச்சினைகள், மனக்குழப்பங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய சிந்தனைகள் போன்றவற்றினூடாக சில நற்கருத்துக்களைக் கூறும் பாணியிலும் அமைக்கப்பட்டுள்ளன.

### 6.7 தம்பிலுவில் ஜெகா :

இவரின் சிறுகதைகள் பொதுவாக பெண்களின் பிரச்சினைகள், பெண்கள் வெளிநாடு சென்று ஏமாற்றமடைதல், பெண்கள் கல்வி கற்றும் வேலைக்குச் செல்ல முடியாத நிலை, சீதனப் பிரச்சினை, பெற்றோரின் அடக்கு முறை, வறுமை போன்ற கருத்துக்களை உள்வாங்கி வெளிவந்துள்ளன.

### 6.8 எஸ். பி. கனகசபாபதி :

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் இவர் அவ்வப்போது சிறுகதைகள் எழுதி வருகின்றார். இவரின் ஒரு சில சிறுகதைகளே கிடைக்கப்பெற்றுள்ளன.

## 7 புனைகதைகளின் உருவம், உத்தி :

### 7.1 கதைத் தலைப்பு :

கதையையே கூறிவிடுதல், நீண்ட தலைப்பு, சொல், சொற்றொடர் போன்றனவாகவும் (சங்கமம், அச்சங்கள், கங்காரு நாட்டிற்கொரு கனவுப் பயணம்) குறியீட்டுப் பாங்காகவும்

(உடைத்துப்போட்ட தெருவிளக்கு, காற்றுக்கனக்கும் தீவு, தொடுவான வெளிகள்) தலைப்புக்கள் அமைந்துள்ளன.

7.2 கதைப் பின்னலும் எடுத்துரைப்பு முறையும்.

ஆசிரியர்கள் தாமே கதை சொல்லுதல், கடிதம் மூலமாக கதையை வளர்த்துச் செல்லுதல், கனவு மூலம் கதை கூறுதல், குறியீடு மூலம் கதை சொல்லுதல் போன்ற பல உத்திகளைக் கையாண்டுள்ளனர். எடுத்துக்காட்டு: கதை சொல்லுகின்ற உத்தி கனவாக அமையும் வகையில் அமைக்கப்பட்டதே கவியுவனின் ''மரணத்தின் தூது'' என்னும் சிறுகதையாகும்.

''இருட்டு மனிதனாக இருக்குமோ என நினைத்துக்கொண்டு விழிகளைத் திறக்கிறேன். என் பக்கத்தில் என் மகன் ரமேஷ் படுத்திருக்கிறான். நான் என் வீட்டில் படுத்துக் கொண்டிருக்கிறேன். அப்படியென்றால் அந்தக் கடிதம், மிரட்டல் மனிதன், இருட்டு உரு, ஜுப்பின் ஒலி, குருஷேத்திரம், அந்தக் கவிதை, கிடுகுப் படுக்கை, கள்ளி முள் எல்லாமே கனவுகளா?……. உள்ளே வருகின்றேன். என் மகன் தூங்கிக் கொண்டிருக்கிறான். அவனின் நெஞ்சு மேலும் கீழும் அமைதியாக அசைகிறது. அவனைப் பார்க்கும் போதெல்லாம் அது கனவாகவே இருக்கட்டும் என்று மனம் இரைகிறது''(கவியுவன்,1996:8).

**7.3 பாத்திரப் படைப்பு.**

புனைகதைகளின் உயிரோட்டத்தினைத் தீர்மானிப்பது பாத்திரமேயாகும். எனவே பாத்திரப் படைப்பானது உயிர்த் துடிப்போடு படைக்கப்படுதல் வேண்டும். திருக்கோவில் பிரதேச புனைகதைப் படைப்பாளிகள் தமது பிரதேச மாந்தர்களையும், கிழக்கிலங்கை மாந்தர்களையும், வடபுல மாந்தர்களையும், மலையக மாந்தர்களையும் தமது கதைகளில் பாத்திரங்களாகப் படைத்துள்ளதோடு கொழும்பு நகர மக்களையும், சகோதர மொழி பேசுவோரையும், புலம் பெயர்ந்தோரையும் தமது கதைகளில் பாத்திரங்களாகப் படைத்து உலாவ விட்டுள்ளனர். மற்றும் படைப்பாளர் கூற வரும் விடயத்தை வாசகர்களுக்கு மிகத் துல்லியமாக எடுத்துரைப்பதற்காக, புனைகதைகளில் படைப்பாளியே பாத்திரமாக வருவதும் உண்டு. இத்தன்மையானது இப்பிரதேசப் புனைகதகளிலும் காணப்படுகின்றது. குறிப்பாக கவியுவனின் பெரும்பாலான கதைகளிலும், படைப்பாளி பாத்திரமாக உருப்பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

**7.4 மொழி நடை.**

ஆசிரியர் கூறும் கதையிலும் அவர் கூறும் செய்தியிலும் அவர் படைத்த பாத்திரங்களிலும் வாசகர்கள் முழுக் கவனத்தையும் செலுத்துவதற்காக ஆசிரியர் கையாளும் ஒரு வகை உத்தியே அவரவரது தனித்துவமான மொழி நடையாகும். சிறுகதையின் கதைக் கருவிற்கு இன்றியமையாதது மொழி நடை. மொழி நடை என்பதனை,

''கதை கருக் கொள்வதே மொழி நடையில் தான். மொழி நடை(style) முதலில் கருக் கொண்டு, பின்னர் கதையையும் பொருளையும் செய்தியையும் அழகாக வெளியிடுகின்றது''(ந.சுந்தரம் பிள்ளை,2005:129) என வரைவிலக்கணப்படுத்துகின்றார் மேனாட்டுச் சிறுகதை ஆசிரியரான மாக்ஸ்கோறர் என்பவர்.

இதற்கமைய அழகியல் வர்ணனை, அணி, சிறப்புத் தொடர்கள் கதையில் வரும் வசனங்களின் ஒழுங்கமைவுகள் போன்றவற்றைப் பயன்படுத்தும் முறையில் திருக்கோவில் பிரதேச புனைகதை

எழுத்தாளர்கள் மிகச் சிறந்த மொழி நடையினைக் கையாண்டுள்ளனர். அத்தோடு பேச்சு மொழி, ஆங்கில மொழி, ஏனைய மொழிப் பயன்பாடு போன்றவற்றோடு கவிதைகளையும் பயன்படுத்தியுள்ளனர்.

## 8. புனைகதைகளின் உள்ளடக்கம்.

8.1 அனர்த்தங்களும் மக்கள் வாழ்வியலும்.

இலங்கையில் பெருமளவு பாதிப்புக்களை ஏற்படுத்திய இனக்கலவரம், யுத்தம், சுனாமி போன்ற அனர்த்தங்களையும் அவற்றின் தாக்கங்களையும் உள்ளடக்கங்களாகக் கொண்டு இப் பிரதேச புனைகதைகள் தோற்றம் பெற்றுள்ளதோடு அனர்த்தங்களால் ஏற்பட்ட பாரிய இழப்புக்கள், இன முரண்பாடு, இன ஒற்றுமை மற்றும் புலப்பெயர்வும் அதனால் ஏற்படும் பல இன்னல்களும் உள்ளடக்கங்களாக இடம் பெற்றுள்ளன.

இழப்பு, இன்னல்களுக்கு எடுத்துக்காட்டாக “இல்லடா வாழ வேணுமெண்டு எனக்குக் கொஞ்சமும் எண்ணமில்ல. இந்தக் கண் மட்டும் ஒழுங்காத் தெரிஞ்சிருந்தால் அண்டைக்கே செத்திருக்கலாம். அவங்கள் வந்தது தெரியாமல் போயித்து. அப்ப செத்திருந்தா இப்ப இப்படிக் கவலப்படத் தேவையில்ல....” (கவியுவன்,1996:72) என குறிப்பிடப்படும் கவியுவனின் “வாழ்தல் என்பது...” என்னும் சிறுகதையினைக் குறிப்பிடலாம்.

இனக்கலவர கால கட்டத்தில் இன முரண்பாடு என்பது பிரதானமாகக் காணப்பட்டது. சிங்களவர்களால் தமிழர்கள் அதிகளவான அடக்கு முறைகளுக்கு உள்ளானார்கள். இருப்பினும் சிறிதளவு நிலவிய தமிழர், சிங்களவர் உறவைக் காட்டும் வகையிலும் இன ஒற்றுமையைப் பிரதிபலிக்கக் கூடிய புனை கதைகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

தமது தாய் நாடு, உறவுகள், சொந்த பந்தம் போன்றவற்றை இழந்து அகதிகளாகத் தஞ்சமடைந்தவர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டதோடு இங்கிருந்து சென்றவர்கள் காலப் போக்கில் தமது பண்பாடு, கலாசாரம் மற்றும் பழக்க வழக்கம் போன்றவற்றைச் சீரழிக்கும் வகையில் தமது வாழ்வை மாற்றியமைத்தும் கொள்கின்றனர். இவற்றையெல்லாம் புலப்படுத்தும் வகையிலும் புலம்பெயர்ந்து சென்றோர் புனைகதைகளைப் படைத்துள்ளனர்.

### 8.2 சமூகச் சூழல் சித்தரிப்பும் சமூகப் பிரச்சினைகளும் :

வாழ்வில் பிரதானமாகக் காணப்படும் காதல், பாசம், குடும்ப உறவு போன்றனவும் பெண்களின் நிலை, வறுமை, மூடநம்பிக்கை, பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினைகள் போன்ற பல கருத்துக்களும் உள்ளடக்கங்களாயுள்ளன.

சமூகத்தில் பெண்களின் பிரச்சினை, பெண்களுக்கிழைக்கப்படும் தீங்குகள் போன்றன தனித்து நோக்கப்படுமளவிற்கு அவை சமூகத்தில் பரவிக் காணப்படுகின்றன. அவற்றுள் சீதனப் பிரச்சினை, பாலியல் வன்முறைக்குட்படுத்தப்படுதல், அடக்கு முறை போன்ற பாரிய பிரச்சினைகளைப் பெண்கள் எதிர்நோக்குகின்றனர். இவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் யோகா.யோகேந்திரன், தம்பிலுவில் ஜெகா, செபரத்தினம் போன்றோர் புனைகதைகளைப் படைத்துள்ளனர்.

ஒரு குடும்பத்தில் நிலவும் வறுமை, அவ் வறுமையால் மாணவர்கள் பாதிப்பிற்குள்ளாதல் போன்றவற்றின் மூலம் சமூகத்தின் வறுமை நிலை பிரதிபலிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டு: ஒரு

குடும்பத்தின் வறுமைச் சூழ்நிலையை பிரதிபலிப்பதாக அமைந்ததே ‘‘இனியும் ஒரு சாவு’’ என்ற கதை.

## 9. முடிவுரை.

தொகுத்து நோக்குகின்ற போது இப் பிரதேச புனைகதை இலக்கியங்களுள் நாவல் இலக்கியம் என்பது வளர்ச்சியடையாத நிலையிலேயே காணப்படுகின்றது. எனினும் திரு.உ.வில்லியம்பிள்ளை அவர்களே மட்டக்களப்பு முதல் நாவல் ஆசிரியராகக் கொள்ளத்தக்கவர் என்ற நிலை இப் பிரதேசத்தின் சிறப்பினைக் காட்டுகின்றது. எனினும் அவரின் இரு நாவல்களும் அச்சில் வெளிவராத நிலையானது திருக்கோவில் பிரதேசத்தின் இலக்கிய வளர்ச்சிப் போக்கினை மட்டுமன்றி ஈழத்து இலக்கிய வளர்ச்சிப் போக்கினையும் பாதித்துள்ளது எனலாம்.

மேலும் ஒப்பிட்டளவில் ஏனைய பிரதேசங்களை விடவும் இப் பிரதேசத்திலிருந்து ஏராளமான புனைகதை இலக்கியங்கள் உருவாகுகின்றன என்றும் இப் பிரதேசத்திலிருந்து புலம்பெயர்ந்தோரினாலும் பல புனைகதை இலக்கியங்கள் படைக்கப்பட்டு வருகின்றன என்றும் அவற்றுள் பல ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தி வளர்ச்சியடையச் செய்துள்ளன என்றும் கூறலாம்.

## 10. உசாத்துணை நூல்கள்.

### 10.1 நூல்கள்.

01. யோகா யோகேந்திரன், 2014,‘‘மீண்டும் ஒரு காதல் கதை’’, AT அச்சகம், திருக்கோவில்.

02. கோவிலூர் செல்வராஜன், 1997,‘‘விடியாத இரவுகள்’’, மித்ர வெளியீடு, சென்னை.

03. செபரத்தினம்.க, 2000,‘‘நயனங்கள் பேசுகின்றன’’, மணிமேகலைப் பிரசுரம், சென்னை.

04. திருக்கோவில் கவியுவன், 1996,‘‘வாழ்தல் என்பது…’’, நண்பர்கள் வெளியீடு, மொறட்டுவ.

05. யோகா யோகேந்திரன், 2002,‘‘இன்னார்க்கு இன்னாரென்று…’’, மணிமேகலைப் பிரசுரம், சென்னை.

06. யோகா யோகேந்திரன், 2015,‘‘அவர்கள் அப்படித்தான்’’, மல்ட்டி அச்சகம், அக்கரைப்பற்று.

07. கந்தையா.வி.சி, 1964,‘‘மட்டக்களப்புத் தமிழகம்’’,ஈழகேசரிப் பொன்னையா வெளியீட்டு மன்றம், யாழ்ப்பாணம்.

08. கேசவன்.கோ, 1988,‘‘தமிழ் சிறுகதைகளில் உருவம்’’, அன்னம் (பி)லட், சிவகங்கை.

09. சுப்பிரமணியன்.நா, 2005,‘‘ஆய்வுகள் பதிவுகள் பார்வைகள் தொகுதி 2’’, சவுத் வி‘ன் வெளியீடு, சென்னை.

10. செல்வகுமார்.எஸ், 2004,‘‘ஈழத்தின் முப்பது சிறுகதைகள்’’, மணிமேகலைப் பிரசுரம், சென்னை.

11. நவநாயகமூர்த்தி, 2014,“திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு”, வானதி பவனம், அக்கரைப்பற்று.
12. றமீஸ் அப்துல்லா, 2012,“அம்பாரை மாவட்டச் சிறுகதை ஆளுமைகள்”, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

## 10.2 கட்டுரைகள்.

01. அன்பழகன் குரூஸ், 2010,“வித்துவான் செபரெத்தினம் அவர்களுடனான ஓர் நேர்காணல்”, செங்கதிர், வீச்சு: 36, மட்டக்களப்பு.

02. அஷ்ரப்.ஏ.எப்.எம், 2010,“ஈழத்தில் தமிழ்ச் சிறுகதையும் பண்பாடும்”,“பன்முகப் பார்வையில் பண்பாடு ஆய்வரங்கக் கட்டுரைகள் 2010”, பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்குமாகாணம்.
03. சந்திரசேகரம்.சி,“ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் மட்டக்களப்பு எழுத்தாளர்கள்”, (ஆ.இல்) “ஈழத்து சமகால தமிழ் இலக்கியம்”, விபிவி கலாசாரமையம்.

04. செங்கதிரோன், 2010,“அதிதிப் பக்கம்”, செங்கதிர்,வீச்சு: 36, மட்டக்களப்பு.
05. யோகரகசா.செ, 2012,“திருக்கோவில் பிரதேசப் படைப்பாளிகள்”,“விளைநிலம்”, கலாசார பேரவை, பிரதேச செயலகம், திருக்கோவில்.
06. ஜெகதீஸ்வரி நாதன், 2014,“வில்லியம் பிள்ளை (புலவர்)”, கலசம், க.பொ.த.(சா∴தர) மாணவர்கள், தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்.